Registered as a NewsPaper | பக்கங்கள் 4 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 05 | [20-07-1998] | செவ்வாய்க்கிழமை | ஓசை 152

## மாநகரசபை வரி அதிகரிப்பு நீதிமன்றம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

யாழ். மாநகரசபையின் சோலை வரி விகித அதிகரிப்பை இடை நிறுத்திவைக்குமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டு முதல் 200 சத வீதமாக சோலை வரி யாழ். மாநகரசபை ஆணையாளரால் அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து கொழும்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கையடுத்தே இவ் இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதார் தனது மனுவில் தெரிவித்திருப்பதாவது: யாழ். மாநகரசபை 1983 மட்டும்தான் மக்கள் பங்களிப்புடன் இயங்கியது. 1987 இல் காலாவதியான மாநகரசபைக்கு தேர்தல் நடத்தப்படவில்லை. அமைச்சரின் பணிப்பின் பேரிலேயே புதிய அதிகரிக்கப்பட்ட சோலை வரியைக் கொண்டுவர முடியும் அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி ராணுவமுகாமில் கோரக் கொலைகள்; கைதிகள் உயிருடன் ரயர் போட்டு எரிப்பு

## விடுதலையானவர் தரும் அதிர்ச்சியூட்டும் தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கடலில் கைது செய்யப்பட்டவர்களில் அநேகர் சிறிலங்கா இராணுவத்தினரால் பலாலிமுகாமில் கோரமாகக்கொலை செய்யப்பட்டதாக சிறிலங்காவின் சிறையில் இருந்து விடுபட்டு யாழ். வந்து சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். எரியும் ரயர் குவியலில் உயிருடன்போட்டுப, மரத்துடன் கட்டிவைத்து அலவாங்கால் குத்தியும் பலர் கொலை செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்முனைக் கடலில் கைது செய்யப்பட்டு பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டு. பின்னர் புனர் வாழ்வு முகாமில் காவலில் இருந்து விடுதலையான அகஸ்ரீன் என்பவரே இக் கோரக் கொலைகள் குறித்த திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் சிறிலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்ட சுமார் 350 பேரில், 135 பேர் வரையிலேயே இக்கோரக் கொலைகளில் இருந்து தப்பியிருப்பதாகவும், ஏனையோர் கொல்லப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார்.

ஒரு படுகொலைச் சம்பவம் பற்றி விபரித்த அகஸ்ரீன் இந்தியாவில் இருந்து பொருள்களுடன் படகில் வந்து கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமிற்கு கொண்டுவரபபட்டதாகவும் அவர்களுள் நானா என்னும் மூஸ்லிம் ஒருவர் இருந்ததாகவும் குறிப்பிட்டார். போதைவஸ்து பொருள் கடத்தலில் ஈடுபடும் நானா, மற்றவர்கள் தன்னை போதைவஸ்துக் கடத்தல்காரர் எனக்காட்டிக்கொடுத்துவிடுவார்கள்என அஞ்சி ஏனையோர் பன்னிரெண்டு பேரையும் விடுதலைப் புலிகள் என இராணுவத்திடம் பொய்யான தகவல்களை தெரிவித்ததைத் தொடர்ந்து அப் பன்னிரண்டு பேரின் கண்கள் கட்டப்பட்ட பின்னர் எரியும் ரயர் குவியலில் உயிருடனேயே தூக்கிப் போட்டு துடிக்கத்துடிக்கக் கொன்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு கைது செய்யப்பட்டவர்களில் சிலரை மரத்தில் கட்டிவைத்து மரத்துடன் சேர்த்து அவர்களின் நெஞ்சில் அலவாங்கால் குத்திக் கொலை செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

### 800 பேருக்கு மேல்

பல்லேகல தடுப்பு முகாமிலிருந்து

## மேலும் 43 இளைஞர்கள் அடுத்த மாதம் விடுவிப்பு

(வடமராட்சி)

பல்லேகல சிறிலங்கா புனர் வாழ்வு முகாமில் இருந்து அடுத்த கட்டமாக 43 இளை முகாமுக்கு இடமாற்றம் செய்து பின்னர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவர். (யோ

## 3மாதங்களில் யுத்தம் முடிவு டி.பி.விஜயதுங்கா உறுதி

(கண்டி)

வடக்கு -கிழக்கு யுத்தத்தை மூன்று மாதங்களுக்கிடையில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப் போவதாக ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா தீர்மானித்துள்ளார். ஆனால் அது பற்றிய தமது திட்டத்தை வெளியிட அவர் விரும்பவில்லை- மத்திய மாகாண, மாகாண சபை முதலமைச்சர் டபிள்யூ பி. திஸாநாயக்கா இதனைத் தெரிவித்தார்.

கண்டியில் பாடசாலைக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்காவில் சமாதானம் ஏற்பட்டதும் டிங்கிரி பண்டா விஜயதுங்கா சகாப்தம் வரலாற்றில் பதியப்படும். அது வரலாற்றில் பொற் காலமாகவும் அமையும் என்றார் அவர்

## 4000 படையினர் மட்டு. நகரில் குவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு நகரில் ஆயிரக்கணக்கான பொலிசாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுளளனர். மட்டக்களப்பிலுள்ள இரண்டு கல்லூரிகளில் இவர்கள் முகாமிட்டுள்ளனர். அங்கு இடம்பெறவுள்ள ஜனாதிபதி இடம்பெயர் சேவைக்காகவே இவ்வாறு படையினர் குவிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 4000 படையினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முகமூடி நபர்கள் திடீர் திடீரென கொண்டு வரப்பட்டு மக்கள் அவர்கள் முன் நிறுத்தப்படுகின்றனர்.

மேலும் பொது மக்களின் வதிவிடங்களுக்கு திடீரென செல்லும் பொலிசார் அங்கு மேலதிகமாக தங்கியிருப்போரை கைது செய்து கொண்டு செல்வதாக தெரிய வருகிறது.

## ஒரே நேரத்தில் இரு பரீட்சைகள்

[யாழ்ப்பாணம்]

இவ்வருடம் யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சையில் வர்த்தகமாணி பகுதி I பரீட்சையும் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சி உயர்தர பரீட்சையும் சில பாடங்கள் ஒரே நாட்களில் ஒரேநேரத்தில் வருவதால் இரு பரீட்சைகளிலும் தோற்றும் பரீட்சார்த்திகள் செய்வதறியாது தடுமாற்றம் அடைந்துள்ளனர். (88

சிறிலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்ட சுமார் 350 பேரில், 135 பேர் வரையிலேயே இக்கோரக் கொலைகளில் இருந்து தப்பியிருப்பதாகவும், ஏனையோர் கொல்லப்பட்டு விட்டதாகவும் தெரி

போதைவஸ்து பொருள் கடத்தலில் ஈடுபடும் நானா, மற்றவர்கள் தன்னை போதைவஸ்துக் கடத்தல்காரர் எனக்காட்டிக்கொடுத்துவிடுவார்கள் என அஞ்சி ஏனையோர் பன்னிரெண்டு பேரையும் விடுத

## 800 பேருக்கு மேல் தடுப்பு முகாம்களில்

(யாழ்ப்பாணம்)

யாழ். கரைமுனைக்கடலில் வைத்து 1991 - 12 - 16 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 மீனவர்களில் 11 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருடன் தொடர்பு கொண்ட போது பலாலி, களுத்துறை, புனர்வாழ்வு முகாம்களில் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் 800 பேருக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவரான அகஸ்ரீன் தெரிவிக்கையில்; தான் கைது செய்யப்பட்டவுடன் காரைநகருக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு 8 நாட்கள் தடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 43 இளைஞர்கள் அடுத்த மாதம் விடுவிப்பு

(வடமராட்சி)

பல்லேகல சிறிலங்கா புனர்வாழ்வு முகாமில் இருந்து அடுத்த கட்டமாக 43 இளைஞர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் அடுத்த மாதம் 17 ஆம் திகதி விடுதலை செய்யப்படுவர். களுத்துறை சிறையில் இருக்கும் தமிழ், சிங்கள இளைஞர்கள் பல்லேகலை முகாமுக்கு இடமாற்றம் செய்து பின்னர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவர். (யோ

இவர்கள் முகாமிட்டுள்ளனர். அங்கு இடம்பெறவுள்ள ஜனாதிபதி இடம்பெயர் சேவைக்காகவே இவ்வாறு படையினர் குவிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 4000 படையினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்

மேலும் பொது மக்களின் வதிவிடங்களுக்கு திடீரென செல்லும் பொலிசார் அங்கு மேலதிகமாக தங்கியிருப்போரை கைது செய்து கொண்டு செல்வதாக தெரிய வருகிறது.

பரீட்சையும் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சி உயர்தர பரீட்சையும் சில பாடங்கள் ஒரே நாட்களில் ஒரே நேரத்தில் வருவதால் இரு பரீட்சைகளிலும் தோற்றும் பரீட்சார்த்திகள் செய்வதறியாது தடுமாற்றம் அடைந்துள்ளனர். (88

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## 2500 தமிழ் மக்கள் சுற்றிவளைத்து கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் குறைந்தது 2500 பேர் சுற்றிவளைப்புகளின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் இதுவரை 50பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

( 4 ஆம் பக்கம் பார்க்க)

ஜெயலலிதா உண்ணாவிரதத்தின் எதிரொலி!

# தமிழகத்தில் பதற்றநிலை அதிகரிப்பு; ரயில்சேவை ரத்து; கடைகள் பூட்டு

(சென்னை)

நடுவர் மன்ற தீர்ப்பின்படி காவிரி நீரைத் தமிழகத்திற்கு வழங்குமாறு கோரி தமிழக முதலமைச்சர் ஆரம்பித்த காலவரையறையற்ற உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து பதற்றநிலை அதிகரித்து வருவதாகவும், பெரும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னை நகரிலும் மற்றும் சில இடங்களில் பேருந்து போக்குவரத்து தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் இதனை அடுத்து பேருந்து போக்குவரத்துகள் நிறுத்திக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல கடைகள் உடைத்து சூறையாடப்பட்டுள்ளன. சில தீயிடப்பட்டுள்ளன. அரச அலுவலகங்களில் ஊழியர் வருகை வெகுவாகக் குறைந்திருந்தது. பாடசாலைகள், கல்லூரிகள் என்பன மூடப்பட்டன.

அ.தி.மு.க. தொண்டர்கள் தெருவில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்திவருகின்றனர். பெருமளவு தொண்டர்கள் பேருந்துகள், லாரிகள் மூலம் சென்னை மரீனா கடற்கரைக்கு வந்து குவிந்தவண்ணம் உள்ளனர்.

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் ரயில்கள் தடுத்து நிறுத்தப்பட்டதை தொடர்ந்து தென்பிராந்திய ரயில் சேவைகள் பல ரத்துச் செய்யப்பட்டன. சில வேறு பாதையில் திருப்பிவிடப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் தாக்குதலின்போது 20 பொலிசாரை காணவில்லை

### திவயின பத்திரிகை தெரிவிப்பு

புத்தளம் மாவட்டத்திலுள்ள லவங்கு அச்சமுனை என்ற இடத்தில் கடந்த 14-ம்திகதி நடாத்திய தாக்குதலில் 20 பொலிசார்காணாமல் போயுள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முகாமிலிருந்து காணாமல் போயுள்ள பொலிசாரை தேடுவதில் அண்மையிலுள்ள காடுகளில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் கடந்த சனிக்கிழமைவரை இவர்கள் கண்டு பிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அவர்கள் கடமைக்கும் திரும்பவில்லை. தப்பியோடிய 24 பேரில் நால்வர்மட்டுமே கடமைக்குத் திரும்பியுள்ளதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி. பியின் ஆயுதங்களை பறிக்க கோரிக்கை

(கொழும்பு)

ஈ. பி. டி. பி. உட்பட அதனுடன் தொடர்புடைய சகல அமைப்புகளிடமும் உள்ள ஆயுதங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு அவர்கள் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்கா ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்ற வாரத்தில் ஜனாதிபதி விஜயதுங்காவை சந்தித்து பேச்சு நடத்திய காமினி திசாநாயக்கா இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதாக இக்கட்சியின் செயலாளர் ஜி எம். பிரேமச்சந்திரா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். மிக விரைவில் இவர்கள் நிராயுதபாணிகளாக்கப்படுவர் என்று ஜனாதிபதி உறுதிமொழி அளித்துள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளு

(4ஆம் பக்கம் பார்க்க)

## முன்னோடிப் பரீட்சை

(மன்னார்)

க. பொ. த. உயர்தரப்பரீட்சைக்கு அடுத்தமாதம் தோற்றவுள்ள மன்னார் மாவட்ட மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை ஒன்று நடைபெறுகிறது.

யாழ். பல்கலைக்கழக மன்னார் மாவட்ட மாணவர் ஒன்றியத்தினால் நேற்று முதல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதத்தை கைவிட வாழப்பாடி வற்புறுத்து

(சென்னை)

தமிழ்நாடு முதல்வர் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதத்தை அவர் உடனடியாக கைவிட வேண்டும் என்றும் இல்லையேல் மக்களின் உயிருக்கும்உடைமைக்கும் இப்போது ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பற்ற நிலையின் காரணமாக உடன் தலையிடும்படி பிரதமர் நரசிம்மராவைக் கோர நேரிடும் என்றும்தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடிஇராமமூர்த்தியும், சட்டப்பேரவையின் எதிர்க்

(4ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதத்தை கைவிடும்படி

## ஆளுநரின் வேண்டுகோளை ஜெயலலிதா நிராகரித்தார்

தமிழக முதல்வர் ஜெயலலிதா கடைப்பிடித்து வரும் உண்ணாவிரதத்தை கைவிடும்படி தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி விடுத்த வேண்டுகோளை அவர் நிராகரித்து விட்டார்.

முதல்வர் ஜெயலலிதாவை நேற்றுமுன்தினமிரவு உண்ணாவிரதப் பந்தலில் நேரில் போய் சந்தித்த தமிழக ஆளுநர் உண்ணாவிரதத்தை கைவிடும்படி வேண்டுகோள் விடுத்தார்.

காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்பை அமுலாக்குவது தொடர்பாக அரசியலமைப்பின் 256-வது பிரிவின்படி கர்நாடக அரசுக்கு மத்திய அரசு ஆணை பிறப்பிக்கும் வரையில் தமது உண்ணாவிரதம் தொடரும் என்றும் முதல்வர் அப்போது தெரிவித்தார்.

தமிழக அரசு காவிரி நதிநீர் பிரச்சினை தொடர்பாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் நிலைக்கு பாரதீய ஜனதா ஆதரவு

[சென்னை]

காவிரி நதிநீர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்டிருக்கும் நிலைப்பாட்டை ஆதரிப்பதாக பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு கிளை கூறியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் மத்திய அரசு விரைவில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மலிவான விளம்பரம் தேட ஜெயலலிதா முயற்சிக்கிறார்

### ராம்தாஸ் தெரிவிப்பு

[சென்னை]

காவிரி நதி நீர்ப்பிரச்சினையைப் பயன்படுத்தி முதல்வர் ஜெயலலிதா மலிவான விளம்பரம் தேட முயல்வதாக, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் மதுரையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, ஜெயலலிதா அரசுமீது சுமத்தப்பட்டுவரும் ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே இந்த உண்ணாவிரதம் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தப் போராட்டத்தால் மக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

## வரி விளம்பரம்

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள். லேஸ் நூல் வகைகள், எவர் சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள-ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6968)

### சுவிற்சர்லாந்தில் கண்காட்சி

பழமை வாய்ந்த Wyler Invicta West-end, Damas Rolex போன்ற தங்க நிறக் கடிகாரங்கள் சுவிற்சர்லாந்தில் கண்காட்சிக்கு அனுப்புவதற்காக நியாயமான விலைக்கு எம்மால் வாங்கப்படும். (பழுதடைந்த நிலையிலுள்ள கடிகாரங்களானாலும் சரி) டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
[சி/7032)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங், சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-6931]

### தவறிவிட்டது

8 7 93 தாண்டிக்குளத்தில் இருந்து கிளிநொச்சிக்கு 5320 இலக்கமுடைய பஸ்சில் பிரயாணம் செய்தபோது உடுப்புக்கள் உள்ளடங்கிய மஞ்சள் பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும் நன்றி. சி நடராசா நீர்வேலி மத்திநீர்வேலி
(5376)

### உடன் விற்பனைக்குண்டு

ஒருகிழமைவளர்ச்சியடைந்த புறொய்லர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" மானிப்பாய்.
(5421

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09 10-72 | வீரச்சாவு 20-07-91

### கப்டன் ஈழவன்
(குமாரசாமி ரமேஸ்குமார்)

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

உமது பிரிவால் துயருறும்
குமாரசாமி குடும்பத்தினர்

191, ஈழவன் வீதி
ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (5420)

---

## 31ஆம் நாள் அஞ்சலி



அமரர்
### செல்லம்மா இராசையா

தோற்றம் 1932 04 05 | மறைவு 1993-06-21

ஆண்டு சிறிமுக ஆன திங்கள் வைகாசி பூண்டதிதி பூர்வபக்கப் பிரதமையில் — பூண்டாள் திருநாமப் புண்ணியஞ்சேர் செல்லம்மா இப்புவியில் தருமங்கள் தலைக் கொண்டதத் தாய்.

[ரவீந்திரா ஏஜென்சி, வவுனியா] மக்கள், மருமக்கள்,
எழுதுமட்டுவாள் (5409) பேரப்பிள்ளைகள்

---

# வடக்கு கிழக்குபிரச்சினைக்கு மரணமே தீர்வாகும்

— பேராசிரியர் நளின் டிசில்வா

(கொழும்பு)

மேற்கு நாடுகளின் நெருக்குதல்களின்விளைவே இலங்கை - இந்திய ஒப்பந்தமாகும். இதனை எதிர்த்தவர்களுக்கு மரணமே விருந்தாகக் கிடைத்தது. வடக்கு கிழக்கு பிரச்சினை கூட இதேவிதமாக தீர்க்கப்படல் வேண்டும் என சர்ச்சைக்குரிய பல்கலைக்கழகப் பேராசிரியரான நளின் டிசில்வா தெரிவித்துள்ளார்.

தலுகமலும்பினி வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

"ஆட்சி அரசியல்" என்ற தலைப்பில் நடைபெற்ற இக் கருத்தரங்கு கம்பஹா அதிகரண சங்க நாயக்கர் வண. அரமன் கொட வன்ன திலக்க நாயக்க தேரோ தலைமையில் நடைபெற்றது.

நளின்டி சில்வா தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் சிங்கள மக்களாகிய நாம் எமக்குள்ளேயே பிளவுபட்டுள்ளோம். மேற்கத்தேய நாடுகளிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட கட்சி அரசியல்முறையே இதற்குக் காரணம். இந்த முறையினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது சிங்கள சமூகமே.

பல்வேறு கட்சிகளும் தேர்தலில் தாம் தோற்கடிக்கப்பட்டதால் இந்நாட்டின் சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தெளிவான கொள்கை ஒன்றை முன்வைக்க முடியாத நிலையில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

நான் ஒருதேசிய அடிப்படையில் பேசும்போது அதனை சிலர் விரும்புகிறார்கள் இல்லை. ஆனால், உண்மை சொல்லப்படவேண்டியது அவசியமாகும்.

தேர்தலில் ஒரு தனி நபரை பல வருடங்களுக்குத் தெரிவு செய்வதன் மூலம் நீங்கள் உங்களுடைய உரிமையை அவருக்கு ஒப்படைத்து விடுகிறீர்கள். இது மேற்குநாடுகளுக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் எமக்கல்ல.

அரசியல் வாதிகளின் பிரதானநோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், தம்மால் முடிந்தளவிற்கு அதிகாரத்தை வைத்திருப்பதாகும். திகதி குறிப்பிடாத இராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்துவிட்டு அதிகாரத்தில் இருந்தவர்களை மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று எவ்வாறுசொல்ல முடியும் என்றார்.

---

மன்னார் பொலிஸ் நிலையத்தில்

# கையொப்பமிட்டு திரும்பிய மூன்று தமிழர் கைது

(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட்டு முகாம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த மூன்று தமிழர்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து அண்மையில் நாடு திரும்பிய இம் மூவரும் பேசாலையில் அமைந்துள்ள ஐ நா அகதிகள் உயர் ஸ்தானிகராலய பொறுப்பின் கீழ் இயங்கும் முகாமில் தங்கியிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கோணமலையைச் சேர்ந்த இளையதம்பி சித்திலிங்கம், ஆறுமுகம் அரசரட்ணம் மற்றும் கட்டுக்காரன் குடியிருப்பைச் சேர்ந்த அருளானந்தம் அமிர்தநாயகம் ஆகிய மூவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த நான்காம் திகதியன்று கைது செய்யப்பட்ட இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விபரம் கூட அறியமுடியாமல் உறவினர்கள் அரச அதிகாரிகளிடமும், ஐ நா. உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந் நிலையில் இந்தியாவிலிருந்து மன்னாருக்கு அகதிகளைக்கொண்டுவருவதால் அவர்களுக்குரிய பாதுகாப்பு குறித்து ஐ நா. உயர்ஸ்தானிகராலய உயர்அதிகாரிகள் கொழும்பில் அரசாங்க உயர் அதிகாரிகளோடு பேச்சு நடத்தவிருப்பதாகவும் கூறப்படுகிறது

# 23 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது

[கொழும்பு]

அம்பாறை, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா மற்றும் நுவரெலியாப் பகுதிகளைச் சேர்ந்த இருபத்து மூன்று தமிழிளைஞர்கள் கடந்த வியா... யங்கள் மற்றும் வீடுகளிலும் வந்து தங்கியிருந்த இவர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கலாம் என்றும் பொலிசார்கூறியுள்ளனர்.

இவர்களுக்கு இருப்பிட வச...

---

# மன்னார் மீனவர் வலைகள் இந்திய மீனவரால் நாசம்

(மன்னார்)

மன்னார்கடலில் இரவு மீன்பிடிக்காக கட்டப்படும் இலங்கை மீனவர்களின் வலைகளை இந்திய மீன்பிடி படகுகள் நாசப்படுத்தி விடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் இருநாட்டு மீனவர்களிடையேயும் நடுக்கடலில் சச்சரவுகள் உருவாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ் விவகாரத்தினால் மன்னார் பகுதி மீனவர் ஒருவர் தனது உயிரையே பறிகொடுத்த சம்பவம் ஒன்று கடந்த வாரம் ஏற்பட்டது. மன்னார் மீனவர்கள் இரவு நேரத்தில் கடலில் மீன் பிடிக்க இராணுவம் தடை செய்துள்ளது. இதனால்தலைமன்னார், பேசாலை மீனவர்கள் பகலில் கடலுக்கு சென்று வலைகளை கடலில் கட்டிவிட்டு இரவுக்கு முன்பாக கரைக்கு திரும்பி விடுவர்.

இந்த வலைகளையே இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசிக்கும் இந்திய மீன்பிடி படகுகள் நாசமாக்கிவிட்டு செல்கின்றதுடன் வலைகள் அபகரிக்கப்பட்டும் வருகின்றன.

இதை தடுக்கும் முகமாக பேசாலையை சேர்ந்த மீனவக் கோஷ்டியொன்று கடந்த வாரம் இரவு நடுக்கடலுக்கு சென்றபோது இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டு நடுக்கடலில் தத்தளிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகினர். நான்குமணி நேரம் கடலில் இவர்கள் நீந்தி உயிருக்கு போராடினர். இவர்களில் பேசாலையைச் சேர்ந்த கா. கொன்சால்டயஸ் என்ற இளைஞர் சடலமாக கரை ஒதுங்கினார். ஏனையோர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பி கரை சேர்ந்தனர்.

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993-07-20

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - அச்சுவேலியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவெய்திய-

**சுரேஷ்** (குணரட்ணம் குலேந்திரன் - பொற்பதி வீதி, கொக்குவில் - யாழ்)

**கெனடி** (— — —)

இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

- **வேலாப்போடி தேவகவி** (ஆயித்தியமலை - மட்டு)
- **கதிர்காமத்தம்பி கிருஷ்ணவேணு** (ஆயித்தியமலை - மட்டு)
- **மோகன்** (ப மோகனதாஸ் -மணற்சேனை - திருமலை)
- **கிருஷ்ணபிள்ளை இன்பராசா** (சல்லிப்பிட்டி - திருமலை)

மட்டு - கோரக்கல்லிமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் எரிக்கப்பட்ட வீட்டினுள் கருகி மாண்ட மூன்று வயதுக் குழந்தை.

1990ஆம் ஆண்டு கொம்படிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சேவியர்** (ஐயம்பிள்ளை இரத்தினபாலசிங்கம் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

மட்டுநகரில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட விவசாயியான வந்தாறுமூலை செட்டியார் வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு ஆ. க வெ. நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். ராகுலன்** (வேலாயுதம் ஜெயரூபன் - மாடிவீடு, வாழைச்சேனை - மட்டு)

**விஜி** (செல்லத்துரை சிற்றம்பலம் - இ. வி வீடமைப்புத் திட்டம் - மட்டு)

**லெப். அர்ஜுன்** (சிவனாந்தன் நந்தகோபால் - 63 மனையாவெளி - திருமலை)

**கில்பேட்** (மயில்வாகனம் விஜயகுமார் - 900, செல்வபுரம் - திருமலை)

**லலித்** (வேல்முருகு விஜயகுமார் - 3-ம்கட்டை, குச்சவெளி - திருமலை)

**2-ம் லெப். பானுமதி** (செல்வகுமாரி செல்வராசா - நெடுங்கேணி - மணலாறு)

## உடன் விற்பனைக்குண்டு

ஒருகிழமைவளர்ச்சியடைந்த புறொய்லர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக் குண்டு. ''மல்லிகாபதி'' மானிப்பாய். (5421

## விளையாட்டு

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திய செற்றப் முறையிலான கரபந்தாட்ட போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற இப்போட்டியில் மட்டுவில் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

## பிரிவுபசார வைபவம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் 1989 ஆம் ஆண்டுக்குப்பின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு தென்மராட்சி அதிபர் சங்கம் பிரிவு உபசாரவைபவம் ஒன்றை நடத்தியது.

கடந்த சனிக்கிழமை இவ் வைபவம் தென்மராட்சி அதிபர் சங்க தலைவர் திரு சி. துரைராசா தலைமையில் யா/ சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கல்விக் கோட்ட மேலதிக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் கலந்து கொண்டார். ஓய்வுபெற்ற அதிபர்கள், அவர்கள் செய்த சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (86)

## பொலிஸ்மா அதிபர் மீண்டும் கடமையில்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா நீண்ட விடுமுறைக்குப் பின்னர் மீண்டும் பதவிப் பொறுப்பை ஏற்றுள்ளார் இவர் நவம்பர் மாதம் வரை கடமையாற்றுவார் எனவும், அதுவரை பதவிவிலகமாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஆண்டு சிறிமுக ஆன திங்கள் வைகாசி பூண்டதிதி பூர்வபக்கப் பிரதமையில் — பூண்டாள் திருநாமப் புண்ணியஞ்சேர் செல்லம்மா இபபுவியில் தருமங்கள் தலைக் கொண்டதத் தாய்.

[ரவீந்திரா ஏஜென்சி, வவுனியா] மக்கள், மருமக்கள்,
எழுதுமட்டுவாள் (5409) பேரப்பிள்ளைகள்

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



# 2-ம் லெப். விஜயா (ஜெயவதனி தம்பிப்பிள்ளை)

பிறப்பு:
26. 02. 1969

வீரச்சாவு:
20. 07. 1991

இப்புவியில் நாமிருந்து ஏங்கிக் கண்ணீருகுத்து
முப்போதும் தவறாதுன் முழு நினைவாய் விழித்திருக்க
காற்றோடு காற்றாகக் கலந்திட்ட எங்கள் செல்வமே
ஆற்றாத நினைவலையால் ஆன்மாவும் அமிழுதடி

ஆனாலும்

உன் உயர் கொள்கையில் விடிவிற்காய்
தலைவனின் வழி நின்று வீரமண்ணில்
வித்தானாய் என்பதினால்

அடைகின்றோம் மன அமைதி.
வேண்டுகிறோம் ஆத்மசாந்தி

அன்புள்ள அம்மா
அன்புச் சகோதரிகள்

''ஜெயவாசா''
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(5398)

---

வானந்தம் அமிர்த நாயகம் ... தாகவும் கூறப்படுகிறது

## 23 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது

[கொழும்பு]

அம்பாறை, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா மற்றும் நுவரெலியாப் பகுதிகளைச் சேர்ந்த இருபத்து மூன்று தமிழிளைஞர்கள் கடந்த வியாழனன்று குருநாகல் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலங்களில் குருநாகல் நகரின் வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளிலும் வந்து தங்கியிருந்த இவர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கலாம் என்றும் பொலிசார்கூறியுள்ளனர்.

இவர்களுக்கு இருப்பிட வசதிகளை ஒழுங்கு செய்தவர் எனக்கூறப்படும் அபேரட்ணா என்பவரும் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## செட்டிகுளம் பகுதியில் புதிதாக புத்தர் சிலைகள்

(வவுனியா)

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட. செட்டிகுளம் பகுதியில் புதிது புதிதாக புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்படுவதாக வவுனியா மக்கள் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக, பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இப் பகுதியில் புத்தர் சிலைகள் அமைக்கப்படுவது பெரும் வேதனை தரும் விடயமாகும் எனவும் அவர்கள் அரசாங்க உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

மன்னார்-மதவாச்சி வீதியில் செட்டிகுளத்திலிருந்து கிழக்குப் பக்கமாக இரண்டு மைல் தொலைவில் ஒரு புத்தர் சிலையும், தென்பகுதியில் செட்டிகுளத்திலிருந்து கப்பாச்சி செல்லும் வீதியில் மூன்று மைல் தொலைவில் பிள்ளையார் கோவில் ஒன்று சிதைக்கப்பட்டு அவ் இடத்தில் புத்தர் சிலையும், தமிழ் கத்தோலிக்கரான ராயப்பு என்பவரின் இல்லம் அமைந்துள்ள வளவில் ஒருபுத்தர் சிலையும் இவ்வாறு இராணுவத்தால் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் செட்டிகுளம் ரோமன் கத்தோலிக்க தேவாலய வளவிலும் ஒரு புத்தர் சிலை அமைக்கப்பட்டதாயினும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதையடுத்து அது அகற்றப்பட்டதும் வவுனியா மக்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## நிவாரண உதவிகளின்றி இடம்பெயர்ந்தோர் அவலம்

(வாழைச்சேனை)

வந்தாறுமூலை, பலாச்சோலை கிராமத்திற்கு குடிபெயர்ந்து வந்த தமிழ் மக்களுக்கு எந்த நிவாரண உதவியும் கிடைக்கவில்லையென புகார் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாத 13ஆம் திகதியன்று மயில வட்டுவான் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களை தொடர்ந்து இடம் பெயர்ந்த இந்த மக்கள் வந்தாறு மூலை மற்றும் பலாச்சோலைபகுதிகளில் குடியமர்ந்தனர்.

வயற்காணிகளையும், சேனைப் பயிர்களையும், கால் நடைகளையும் திடீரெனக் கைவிட்டு இடம்பெயர்ந்த இம் மக்களுக்கு இடம் பெயர்ந்த அன்றைய தினம் மட்டுமே ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு உலர் உணவுப் பொதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இதுவரை எந்தநிவாரணமோ, உதவியோ வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

எந்த வித தொழிலுமின்றி கஷ்டப்படும் இந்த மக்களுக்கு உதவும்படி அரசாங்க அதிகாரிகளிடமும், அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் விடுத்த வேண்டுகோள்களால் இதுவரை பயன் எதுவும் ஏற்படவில்லையாம்.

---

வாழைச்சேனை - மட்டு)
**விஜி** (செல்லத்துரை சிற்றம்பலம் - இ. வி வீடமைப்புத் திட்டம் - மட்டு)
**லெப். அர்ஜுன்** (சிவனாந்தன் நந்தகோபால் - 63. மனையாவெளி - திருமலை)
**கில்பேட்** (மயில்வாகனம் விஜயகுமார் - 900, செல்வபுரம் - திருமலை)
**லலித்** (வேல்முருகு விஜயகுமார் - 3-ம்கட்டை, குச்சவெளி - திருமலை)
**2-ம் லெப். பானுமதி** (செல்வகுமாரி செல்வராசா - நெடுங்கேணி - மணலாறு)
**ஜெயா** (முருகையா ஜெயசீலன் - புதுமுறிப்பு, உருத்திரபுரம் - கிளிநொச்சி)
**யூலியட்** (ஆன் அனுஷியா மரியதாஸ் - இல, 40- ஜெயந்திநகர் - கிளிநொச்சி)
**தர்சினி** (ரஞ்சினி அருளம்பலம் - இல 57, உருத்திரபுரம்- கிளிநொச்சி)
**நாகேஸ்வரி** (பிரபாவதி சந்தான் - சென்மேரிஸ்வீதி, அடம்பன் - மன்னார்)
**லெப். கொலின்** (சண்முகானந்தன் மணிவண்ணன் - பிள்ளையார் கோயிலடி, மயிலிட்டி - யாழ்)
**லெப். மேகன்** (பொன்னையா தமிழகன் - வேலம்பராய் - நாவற்குழி கிழக்கு)
**2-ம் லெப். இலக்கியன்** (கதிர்காமு இரவீந்திராசா - அரியாலை கிழக்கு - யாழ்)
**2-ம் லெப். விஜயா** (ஜெயவதனி தம்பிப்பிள்ளை - அல்வாய் மேற்கு - பருத்தித்துறை)
**நேரு** (சாம்பமூர்த்தி குமரேசன் - புத்தூர் மேற்கு- புத்தூர் - யாழ்)
**சோபிகா** (பராசக்தி கந்தசாமி - கட்டுவன், ஏழாலை மேற்கு - யாழ்)

மன்னார் - வாங்காலையில் முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவததினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய-
**வீனஸ்** யோசப் கிருபைராசா [நேசன்] - புதுக்கமம், உயிலங்குளம் - மன்னார்[

மட்டு - பள்ளத்துச்சேனையில் எதிர்பாராதவிதமாக துப்பாக்கி வெடித்ததில் எமைப்பிரிந்த-
**ஜீவா** [நடராசா ரவி - கல்முனை 03 - அம்பாறை]
**ராமன்** [உதயகுமார் - கிரான் - மட்டு]

மணலாறு - நித்திகைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-
**நீதி** (காத்தமுத்து சிவகுமார் - இலுப்பையடிச்சேனை, பன்குடாவெளி - மட்டு)

தமிழீழக்கடற்பரப்பில் (கற்கோவளம் - காரைநகர்) தொழிலில ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் பலியான தமிழ் கடற்றொழிலாளி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❋ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-7037)

சிந்தனைக்கு

அரசர் அவையும், அமைச்சர் குழுவும், தானைத் தளபதிகளும் செய்யும் ஒவ்வொருதவறுக்கும் வேதனையை அனுபவிப்பது ஏழையின் குடில்தான்.

– சார்ல்ஸ் கோல்ட்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-07-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## 'தேசிய அரசு' ஐ. தே. க. குத்துக்கரணம்

'தேசிய அரசு' அமைத்தல் என்ற நிலைப் பாட்டில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி பின் வாங்கியுள்ளது போல் தெரிகின்றது. ''தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா எந்தவொரு தனிமனிதருடனோ, கட்சியுடனோ பேச்சுவார்த்தை எதையும் நடத்தவில்லை'' என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கூற்று இதனை உணர்த்துகிறது.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறுவது போன்று தேசிய அரசு அமைத்தல் என்பதற்கும், ஐ. தே. கட்சிக்கும் சம்பந்தமில்லை என்பது உண்மைக்குப் புறம்பானதாகும். 'தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி முதலில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பே பேசிவந்தாராயினும், எவரும் அதில் அக்கறை காட்டவில்லை. ஆனால், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சு வார்த்தை ஆரம்பமானதை தொடர்ந்தே 'தேசிய அரசு' என்ற பேச்சு எழுந்தது. இத்திட்டம் ஜ. ஐ. தே. முன்னணியையும், சிறிலங்காசுதந்திரக் கட்சியில் அதிருப்தியுற்ற அனுரா போன்றவர்களையும் இணைத்துக் கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தரப்பு வெளிப்படுத்திய திட்டமாகும்.

மேலும், இத்தேசிய அரசுத்திட்டம் குறித்து வெளிவந்த தகவல்கள் எதுவித ஆதாரமுமற்றதாக எழுந்தவையல்ல. இத்தேசிய அரசு பற்றி கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் யாவும் போதிய முக்கியத்துவம் குறித்துப் பிரசுரித்ததோடு, ஆசிரியர் தலையங்கம், கட்டுரைகள் என்பவற்றையும் எழுதின. தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை பற்றியும் பேச்சுக்கள் அடிபட்டன.

இந்நிலையில், 'தேசிய அரசு' அமைத்தல் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஐ. தே. க. பின் வாங்கியதற்குப் பல காரணங்கள் உள்ளன. 'தேசிய அரசு' திட்டத்தை அரசாங்கம் திட்டமிட்ட போது ஐ. தே. கவிற்கு எவை சாதகமான அம்சங்களாகக் கருதப்பட்டனவோ, அவை குறித்து முன்னேற்றகரமான முடிவுகள் பேச்சுவார்த்தைகளில் உடன் கிட்ட முடியாமல் போனமையே அரசாங்கம் இன்று பின்னடிப்பதற்குக் காரணமாகும்.

இதில், அரசாங்கத்தின் பிரதான குறிக்

## தோல்வியுற்றவரின் கீழ் புனரமைப்புக் குழு

அநுரா கண்டனம்

(கொழும்பு)

தோல்விகளையே தொடர்ந்து தழுவிவந்த ஒருவரை சிறிலங்கா சுதந்திரக்கட்சி புனரமைப்புக்குழுவின் தலைவராக நியமித்திருப்பது பெரும்கேலிக்கூத்து ஆகும் இவ்வாறு அநுரா பண்டாரநாயக்க கட்சித் தலைவி சிறிமாவோவிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜூன் 24ஆம் திகதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குவரத்தவறியமைக்கு எழுத்து மூலம் விளக்கம் தரும்படி கேட்டு கட்சித்தலைவி எழுதிய கடிதத்திற்கு பதிலளித்து எழுதிய பதில் கடிதத்தில் அநுரா மேலும் குறிப்பிடுகையில், புனகட்டுநாயக்காவிற்கு ரமைப்புக் குழுத் தலைவராக அநுருத்த ரத்வத்த நியமனம் செய்யப்பட்டிருப்பதற்கு உறவினர் என்பதே காரணமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அநுருத்த ரத்வத்த 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற எந்த தேர்தலிலும் தான் போட்டியிட்ட தொகுதியிலோ அல்லது அமைப்பாளராக செயற்பட்ட தொகுதியிலோ வெற்றிபெறவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள அநுரா, தோல்விகண்டவர்களை நியமிப்பதால் கட்சி பலவீனமடைந்து தோல்வி காணவே வழிகோலும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிசார் வர முன்பாக உடுகம்பொலவெளியேறினார்

பாராளுமன்றத்தில் ஹமீத்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல சென்னையிலிருந்து கொழும்பு வந்தபோது அவர் பயணம் செய்த விமானம் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே கட்டுநாயக்காவை வந்தடைந்து விட்டது. இதனால் பொலிசார் விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்னரே உடுகம்பொல சுங்கப் பரிசோதனைகளை முடித்துக் கொண்டு வெளியேறி விட்டார். இதனாலேயே விமான நிலையத்தில் வைத்து உடுகம்பொலவை கைது செய்ய முடியவில்லை என்று நீதி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் மறுநாளே திரு. உடுகம்பொல நீதிமன்றத்தில் சரணடைந்து விட்டார் என்றும் தெரிவித்தார்.

## தமிழ் இளைஞர் 14 பேர் கண்டி பொலிசாரால் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பை சேர்ந்த 14 தமிழ் இளைஞர் யுவதிகள் கண்டி பொலிசாரால் பேராதனைப் பகுதியில் வீடு ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கண்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது இவர்களுடன் கார் சாரதி ஒருவரும் சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைது செய்து கொண்டு சென்றதாக தெரிய வருகின்றது.

## கொழும்பில் தமிழர் கைது; மன்னிப்புச்சபை கவலை

(லண்டன்)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் கண்டபடி தேவையற்ற வகையில் கைது செய்யப்படுவதையிட்டு சர்வதேச மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது. பெருமளவில் தமிழர்கள் கைது செய்யப் படுவதற்கு எதிராக கடந்த மாதம் 10 ஆம் திகதி அறிவித்த நடைமுறையை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறும் அரசை சர்வதேச மன்னிப்புச்சபை கேட்டுக் கொண்டுள்ளது

இது தொடர்பாக மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக் ...

மூர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றனர். முற்றிலும் அவர்களுடைய இன அடிப்படையிலேயே இவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் போல் தெரிகிறது. எவ்வளவு பேர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை.

சில பொலிஸ் அதிகாரிகளும் மற்றவர்களும் கைதாவோரின் விடுதலைக்காக பணம் செலுத்துமாறு அவர்களிடம் அல்லது அவர்களது உறவினரிடம் கோருவது ஒரு வழமையான புகாராகி விட்டது என்றும் ...

# பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிகள் தொடர்கிறதாம்

## பிரதமர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

''இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பல விடயங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. 1983ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பிரச்சினைக்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன'' இவ்வாறு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தேசிய வானொலிக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; ''தமிழ்மொழி அரசகரும மொழியாக்கப்பட்டது. இனவிகிதாசாரத்திற்கேற்ப தொழில் வழங்கப்படுகிறது. தமிழ் மக்களின் உயிர், உடமைகள் பாதுகாக்கப்படுகிறது. 1983ஜூலை நிலை ஏற்படாது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மாகாணசபை மூலம் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

செய்யப்படவேண்டிய இரண்டு விடயங்கள் மட்டுமே உள்ளன. ஒன்று வடக்குகிழக்கு மாகாணப்பகுதிகளுக்கு சில மேலதிக அதிகாரங்களை வழங்குவதுமற்றது வடக்குகிழக்கு இணைப்பு தொடர்பான பிரச்சினை. இது தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் தொடர்பு கொண்டுவருகின்றோம்.

விடுதலைப் புலிகள் தெரிவுக் குழுவில் தமது ஆலோசனையை தெரிவிப்பதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தமிழ்க் குழுக்கள் தெரிவுக்குழுவிலிருந்து விலகினாலும் ஏனையகட்சிகளுடன் ஆலோசனை நடந்தேவருகிறது என்றார்.

## மேலும் ஒருவர் வந்து சேர்ந்தார்

(வவுனியா)

பல்லேகல புனர்வாழ்வுமுகாமில் இருந்து விடுதலையான சுப்பிரமணியம் சற்குணராசா (30) முல்லைத்தீவு என்பவர் நேற்று முன் தினம் வடபகுதிக்குள் வந்து சேர்ந்தார்.

பல வருடங்களாக சிறிலங்கா படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் சில இளைஞர்கள் கடந்த 14ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே.

## கறுப்பு ஜூலை தினத்தன்று கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கறுப்பு ஜூலை 83இன் 10ஆம் ஆண்டு நிறைவு தினத்தில் கொழும்பு புதிய மகசீன் சிறையிலுள்ள 400க்கும் மேற்பட்ட தமிழ் கைதிகள் துக்க தினமாக பிரகடனம் செய்து உண்ணாவிரதம் இருக்கவுள்ளனர்.

வெலிக்கடை சிறை படுகொலை ஜூலை 27ஆம் திகதி 1983இல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. எதிர் வரும் 27ஆம் திகதி தமக்கு வழங்கும் மூன்றுவேளை உணவை அனாதை இல்லத்திற்கு வழங்க கைதிகள் முடிவு செய்துள்ளனர்.

## தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டை தேவை

தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தேசியஆட்பதிவுதிணைக்களத்தின் அடையாளஅட்டை கட்டாயமானதாகும் என்று தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை பாராளுமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது

தோட்டப் புறங்களில் பலருக்கு இன்னமும் அடையாள அட்டைகள் இல்லை என்பதையும் அடையாள அட்டை பெறுவதில் இருக்கும் சிக்கல்கள் இன்னமும் முற்றாக தீர்த்து வைக்கப்படவில்லை என்பதையும் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டிப் பேசினார். எனினும் ஆளுங்கட்சி மற்றும் எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இச் சட்டமூலத்தை ஆதரிக்க சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## கொழும்பில் தமிழரிடம் இப்படியும் மோசடி

(கொழும்பு)

மோதிரத்தில் புலிச்சின்னம் உள்ளது. கழற்றிக் காட்டு எனக் கேசரி அப்பாவி ஒருவரிடமிருந்து மோதிரத்தையும் பணத்தையும் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற அரசஊழியர் ஒருவர் ஆமர் வீதிச் சந்தியில் பஸ்ஸிற்காக காத்து நின்றார்.

அந்நேரத்தில் இவரிடம் வந்த ஓர் இளைஞர் உமது மோதிரத்தில் புலிச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது எனக்குத் தெரியும். கழற்றி காட்டும் என மிரட்டினார். இதனால் அவர் அச்சத்தினால் மோதிரத்தைக் கழற்றி இவ் இளைஞரிடம் கொடுத்தாராம். மோதிரத்துடன் அவரிடம் இருந்த ஐயாயிரம் ரூபா பணத்தையும் அபகரித்த அவ்விளைஞர் பஸ் ஒன்றில் ஏறி தப்பிச் சென்றுவிட்டார்.

பிரேமா கொலைச் சம்பவம்

## முதலாவது சந்தேகநபரின் பாதுகாப்புக்கு வலியுறுத்து

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசா கொலையில் முதலாவது சந்தேக நபரான கடை உரிமையாளர் சமன் சுஜீதாவிற்கு உயிராபத்து உண்டு என்றும் அவருக்கு பாதுகாப்பு வேண்டும் என்றும்நீதிமன்றத்தில்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இக்கோரிக்கையை விடுத்தார். அப்போது சந்தேக நபருக்கு ஏற்கனவே பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாக அரசதரப்பு சட்டத்தரணி கூறினார். இதற்கு பதிலளித்த எதிர்த்தரப்பு சட்டத்தரணி காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா, பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன ஆகியோருக்கே பொலிசாரால் பாதுகாப்பு வழங்க முடியவில்லை. இந்நிலையில்பாதுகாப்புஅளிக்கப்பட்டிருப்பதாக கூறுவதை நம்புவதற்கில்லை என்றார். இதன் போது நீதிமன்றத்தில் பலத்தசிரிப்பொலி எழுந்தது.

இந்நிலையில், 'தேசிய அரசு' அமைத்தல் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஐ. தே. க. பின் வாங்கியதற்குப் பல காரணங்கள் உள்ளன. 'தேசிய அரசு' திட்டத்தை அரசாங்கம் திட்டமிட்ட போது ஐ. தே. கவிற்கு எவை சாதகமான அம்சங்களாகக் கருதப்பட்டனவோ, அவை குறித்து முன்னேற்றகரமான முடிவுகள் பேச்சுவார்த்தைகளில் உடன் கிட்ட முடியாமல் போனமையே அரசாங்கம் இன்று பின்னடிப்பதற்குக் காரணமாகும்.

இதில், அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாக ஐ. ஐ. தே. முன்னணியை இணைப்பதன் மூலம், மேல் மாகாண சபை ஆட்சியைக் கைப்பற்றுதல், மற்றும் தென், வடமேல் மாகாணசபை ஆட்சிகளை ஸ்திரணப்படுத்துதல் என்பன இருந்தன. அடுத்ததாக சுதந்திரக்கட்சியிலுள்ள அனுரா தலைமையிலான அதிருப்தியாளரை இணைத்துக் கொள்வதன்மூலம், அக்கட்சியை உடைப்பதும், முஸ்லிம் காங்கிரசுடன் உறவை ஏற்படுத்துவதன் மூலம் கிழக்கில் முஸ்லிம்களின் ஆதரவை திரட்டுவதுடன், வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வசனவாக்கெடுப்பில் ஆதரவைத் தேடுதல், என்பன இருந்தன. மேலும், இனப்பிரச்சினைக்கான தீர்வை 'தேசிய அரசு' என்ற ரீதியில் மேற்கொள்ளுதலும் முக்கிய நோக்கமாகும்.

ஆனால், ஐ. தே. கவின் இவ் எதிர்பார்க்கைகளில் குறிப்பிடக் கூடிய முன்னேற்றம் ஏற்படவில்லை. அனுரா தேசிய அரசு என்பதை ஏற்கவில்லை என அறிவித்தார். அதேவேளை, அவர் கட்சியில் இரு து இடைநிறுத்தி வைக்கப்பட்டமை அனுராவினால், பயனேதும் உடன் கிடைக்க வாய்ப்பில்லை என ஐ. தே. க. அரசு கருதுகின்றது போல் உள்ளது.

மேலும், ஐ. ஐ. தே. முன்னணி மேல் மாகாணத்திலும், வடமேல் மற்றும் தென் மாகாணத்திலும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வழங்கும் ஆதரவை உடன் வாபஸ் வாங்க மறுத்தமையும், ''மாகாண விடயங்கள் மாகாண மட்டதிலும் தேசிய பிரச்சினைகள் தேசிய மட்டத்திலும்'' அணுகப்படும் என்ற அறிவிப்பின் மூலம் மத்திய அமைச்சரவையில் பங்கு கேட்பதிலேயே குறியாக உள்ளமையும் ஐ. தே. கவை திருப்தி கொள்ள வைக்கவில்லை. குறிப்பாக மேல் மாகாண சபை குறித்த ஐ ஐ. தே. முன்னணியின் நிலைப்பாட்டை அரசாங்கம் விரும்பவில்லை.

இவ்வாறானதொரு நிலையில்தான் இன்று 'தேசிய அரசு' என்ற பேச்சிற்கும், அரசிற்கும் சம்பந்தம் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரசிங்கா அறிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்காவின் இக்கூற்றானது தமது முயற்சி தோல்வியில் முடிவுற்றதை மறைப்பதற்கான நடவடிக்கையாகும். ஆனால், ஐ தே. கவைப் பொறுத்து இவ்வாறான 'புரட்டு' புதியதொன்றல்ல. பேச்சுக்களை நடத்துவதும், ஒப்பந்தங்களைச் செய்வதும் அதனைப் பின் மறுப்பதும், மீறுவதும் அவர்களின் வாடிக்கையான செயல்.

யில் கைது செய்யப்படுவதை யிட்டு சர்வதேச மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது. பெருமளவில் தமிழர்கள் கைது செய்யப் படுவதற்கு எதிராக கடந்த மாதம் 10 ஆம் திகதி அறிவித்த நடைமுறையை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறும் அரசை சர்வதேச மன்னிப் புச் சபை கேட்டுக் கொண்டுள்ளது

இது தொடர்பாக மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக்கையில் கொழும்பில் பல தமி

படையிலேயே இவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் போல் தெரிகிறது. எவ்வளவு பேர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை.

சில பொலிஸ் அதிகாரிகளும் மற்றவர்களும் கைதாவோரின் விடுதலைக்காக பணம் செலுத்துமாறு அவர்களிடம் அல்லது அவர்களது உறவினரிடம் கோருவது ஒரு வழமையான புகாராகி விட்டது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

## கறுப்பு ஜூலை தினத்தன்று கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கறுப்பு ஜூலை 83இன் 10ஆம் ஆண்டு நிறைவு தினத்தில் கொழும்பு புதிய மகசின் சிறையிலுள்ள 400க்கும் மேற்பட்ட தமிழ் கைதிகள் துக்க தினமாக பிரகடனம் செய்து உண்ணாவிரதம் இருக்கவுள்ளனர்.

வெலிக்கடை சிறை படுகொலை ஜூலை 27ஆம் திகதி 1983இல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. எதிர் வரும் 27ஆம் திகதி தமக்கு வழங்கும் மூன்றுவேளை உணவை அனாதை இல்லத்திற்கு வழங்க கைதிகள் முடிவு செய்துள்ளனர்.

என்றும் நீதிமன்றத்தில் வேண்டு

தரப்பு சட்டத்தரணி கூறினார். இதற்கு பதிலளித்த எதிர்த்தரப்பு சட்டத்தரணி காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா, பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன ஆகியோருக்கே பொலிசாரால் பாதுகாப்பு வழங்க முடிய வில்லை. இந்நிலையில்பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாக கூறுவதை நம்புவதற்கில்லை என்றார். இதன் போது நீதிமன்றத்தில் பலத்தசிரிப்பொலி எழுந்தது.

# நீதிமன்ற ஆணையின்றி பொலிசார் விசாரிப்பதை தடுக்க பிரேரணை

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவு இல்லாமல் எவரையும் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்துவதைத் தடுக்கக்கோரும் ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரின் தனிப் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் தனிப்பட்ட பிரேரணைகள் விவாதிக்கப்படும் தினத்தில் விவாதத்திற்காக வரும் இப்பிரேரணையை, இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு தனி மனிதனதும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகவே சமர்ப்பித்திருப்பதாக சிறிநாத் லாலகுமாரசிங்க கூறியுள்ளார்

இவர் சமர்ப்பித்த நான்கு பிரேரணைகள் அண்மையில் ஏகமனதாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதும், வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியமானது எனக்கோரும் பிரேரணையைக் கொண்டு வந்தவரும் இவரே என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## தேசிய அரசு அமைக்க அரசு முடிவு செய்யவில்லை

### ஹரல்ட் ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான எந்தவொரு முடிவுக்கும் அரசாங்கம் இன்னமும் வரவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரான ஹரல்ட் ஹேரத் கூறியுள்ளார்.

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அண்மையில் நாடுதிரும்பியுள்ள முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் லுடன் அரசு இன்னமும் எந்தப் பேச்சுக்களையும் ஆரம்பிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

கடமை நேரம் தூங்கிய

## கான்ஸ்டபிளை எழுப்பிய சப் இன்ஸ்பெக்டர் காயம்

காவல் கடமை நேரத்தின் போது தூங்கிக் கொண்டிருந்த கான்ஸ்டபிளைத் தட்டி எழுப்பி எச்சரித்த சப் - இன்ஸ்பெக்டர் ஒருவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும், தெரியவருவதாவது பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப பொலிஸ் நிலையத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள் தூங்கிக் கொண்டிருப்பதைக்கண்ட சப் இன்ஸ்பெக்டர் அவரைத் தட்டி எழுப்பினாராம். அதனைத் தொடர்ந்து இருவருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் முடிந்தது. இதனையடுத்து இருவரும் காயங்களுடன் சிகிச்சைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

## நான்கு தமிழ் வாலிபர்கள் 6ஆம் மாடியில் தடுப்பு

(கொழும்பு)

சந்தேகத்தின்பேரில் கைதான அச்சுவேலி இளைஞர்கள் நால்வர் 6ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து கடந்தமாதம் 7ஆம் திகதி இவர்கள் நீர் கொழும்புப் பொலிசாரால் கைதானார்கள்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களான சின்னத்துரை நிலாவண்ணன் (வயது 22) வெளிநாடு போகவந்த புவிலிங்கம் சுகுணேஸ்வரன் (வயது 19) செல்வராஜா சிறிஸ்கரன் (வயது 22) கிருஷ்ணராஜா விமலேந்திரன் ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்கள் நால்வரும் நீர்கொழும்பில் ஐந்து தினங்கள் தடுத்து வைக்கப்பட்டபின் கடந்த மாதம் 13-ம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த நாலாம் திகதி உறவினர்களைப் பார்க்க குற்றப் புலனாய்வு தலைமையகத்திற்கு இவர்கள் கொண்டு வரப்பட்டனர். இதன்போது நீர்கொழும்பில் தாம் பலத்த தாக்குதல்களுக்கு ஆளானதாக நால்வரும் தெரிவித்தனர். 20-ம் திகதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிலாப்தீன் தம்மிடம் வாக்குமூலம் பெற்றதாக தெரிவித்தனர்.

## புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

புங்குடுதீவு மேற்கு அமெரிக்க மிஷன் வித்தியாலய மாணவர்களின் 1991-ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் காலதாமதமாக அண்மையில் கிடைக்கப் பெற்றுள்ளன. மேற்படி பாடசாலையைச் சேர்ந்த செல்வி திருவருட்செல்வி 163 புள்ளிகளும், செல்வி தக்சாயினி 149 புள்ளிகளும் பெற்றுச் சித்தி அடைந்துள்ளனர்.

## புதிய உத்வேகத்துடன் சர்வோதய செயற்பாடும்

(கொழும்பு)

சர்வோதய இயக்கத்திற்கு எதிரான கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டிருப்பதாகவும் அதனையடுத்து அவ்வியக்கத்தின் பணிகள் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப் படுமெனவும் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்னா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இவ்வியக்கத்திற்கு எதிரான கட்டுப்பாடுகளை நீக்கியமைக்காக ஜனாதிபதி விஜயதுங்கவிற்கு நன்றியும்தெரிவித்தார்.

– ஏ. ரி. ஆரியரத்னா

## தடுப்புமுகாம்இன்னல்களை கேட்பார் யாருமில்லை

### கைதிகள் கவலை

(கொழும்பு)

தடுப்பு முகாமில் பல இன்னல்களை நாம் அனுபவித்து வருகின்றோம். எமக்கு ஏற்பட்ட அநீதிகளை எடுத்துக் கூறுவதற்கு ஓர் உயரதிகாரிகளும் வருவதில்லை. இவ்வாறு சிறிலங்காவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சந்தேசிய வானொலிக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளனர். அதில் மேலும் பல கட்டங்களில் எம்மை பார்வையிட வந்த உயர் அதிகாரிகளுக்கு எமது நிலை தொடர்பாக அறிவித்தபோது அவர்கள் வழங்கும் உறுதிமொழிகள் வெறுமனே காற்றில் பறந்து விடுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## மூவர் கைது

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற மூவர் மாத்தளைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்பகுதியில் நடைபெற்ற பல கொள்ளைகளின் சூத்திரதாரிகள் இவர்கள் என பொலிசார் தெரிவித்தனர்

# கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஒன்பது மாதங்கள் சித்திரவதை

## விடுவிக்கப்பட்டவர் தெரிவிப்பு

(வடமராட்சி)

பலாலிசிறிலங்கா இராணுவ முகாமில் ஒன்பது மாதங்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் கைகால்கள் கட்டப்பட்ட நிலையிலும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டேன்.

இவ்வாறு பல்லேகல சிறிலங்கா புனர்வாழ்வு முகாமிலிருந்து 14ஆம் திகதி விடுவிக்கப்பட்டு வந்தவர்களில் ஒருவரான சுப்பர் மடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சூசைப்பிள்ளை ஜேசுதாஸ் (வயது 32) வடமராட்சி செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சிறிலங்கா கடற்படையினரால் பருத்தித்துறை கடற்பரப்பில் இந்தியாவுக்குச் சென்றிருந்த போது 25-02-91இல் கைது செய்யப்பட்டோம். என்னுடன் மூவர் அன்று கைது செய்யப்பட்டு காரைநகர் கடற்படை முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டு அங்கே 12 தினங்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோம்.

பின்னர் பலாலிக்கு மாற்றப்பட்டு அங்கே கடுமையான தாக்குதல்களுக்கு இலக்கானோம். புலிகளுக்கு டீசல் கடத்துகிறீர்களா என்றுகேட்டு தாக்க ஆரம்பித்த இராணுவத்தினர் எங்களை படுமோசமான முறையில் தாக்கினர்.

இந்தக் காலப்பகுதியில் ஒன்பது மாதங்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் தாக்கப்பட்டோம். கைகால்கள் கட்டப்பட்டநிலையில் தண்ணீர்த் தொட்டிக்குள் மூழ்க வைத்து தாக்கப்பட்டோம். ஆரம்பத்தில் சாப்பாட்டுக்குப் பதிலாக நேரம் தப்பாமல் மூன்று நேரம் அடி உதை கிடைக்கும்.

பலாலி முகாமில் நாங்கள் எல்லா வேலைகளும் செய்தோம். இராணுவத்தினரின் மலசல கூடங்கள் எடுப்பதும், துப்புரவு செய்வதும் எமக்கு அன்றாட வேலையாகி விட்டது 27 02-92இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டோம். அதனையடுத்து 17-08-92இல் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டோம். என்னுடன் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் பல்லேகலமுகாமில்இருக்கின்றனர்

பலாலி முகாமில் குளிப்பதற்குக் கூடத் தடை. 15 தினங்களுக்கு ஒரு தடவையே குளிக்க இராணுவம் அனுமதிக்கும் அதுவும் குறிப்பிட்டளவு தண்ணீரே தரப்படும். களுத்துறையில்இருந்த எங்களை 20-3-93 இல் பல்லேகல முகாமுக்கு மாற்றினர் என்று தெரிவித்தார். (யோ)

## அதிகரித்துள்ள சம்பளப்படி பட்டியல் தயாரிக்க பணிப்பு

01 07.93 தொடக்கம் வழங்கப்பட வேண்டிய சம்பளத்தின்படி அலுவலகங்களில் கடமை யாற்றுபவர்களின் விபரங்களை தயாரித்து அனுப்பி வைக்குமாறு சகல கோட்ட மாவட்ட கல்விப் பணிப்பாளர்களையும் வடகிழக்கு மாகாண கல்விஅமைச்சு கோரியுள்ளது.

மேலும் சம்பளத் திட்டம் 1993 தை மாதம் பெற்ற சம்பளம், ஆடி 93-ல் பெறவேண்டிய சம்பளம் ஆகியவற்றில் சேவை யாற்றுபவர்களின் பெயர், விபரம், தரம் ஆகியவை இதில் கேட்கப்பட்டுள்ளது. மேலும் 1994-ல் வெற்றிடமாகவுள்ள சேவை விபரங்களையும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக நேரக் கொடுப்பனவு விபரங்களையும் மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது. (17)

## கொள்ளை நடத்த முற்பட்ட இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

கொள்ளை நடத்த ஆயத்த நிலையில் இருந்த முன்னாள் இராணுவத்தினர் மூவர் விசேட அதிரடிப் பொலிசாரினால் எல்கடுவ பகுதியில் நள்ளிரவு நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைத்துப்பாக்கி உட்பட பயங்கரமான கத்தி மற்றும் வாள் போன்றவை இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் இவர்களிடம் மேலும் சில ஆயுதங்கள் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

குருநாகல, நாவலப்பிட்டிய, மற்றும் மாத்தளை பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள்எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 19-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10490

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-3633, 41-7693, 42-3329, 27-9489, 42-3267
24-0951, 40-9188, 40-2573, 26-3177, 26-1343
26-1735, 41-4194.

## மரண அறிவித்தல்கள்

# கப்டன் நக்கீரன் புகழுடல் இன்று மக்கள் அஞ்சலிக்கு

(வடமராட்சி)

வாகன விபத்தில் வீரச் சாவடைந்த கப்டன் நக்கீரனின் (மாமா) புகழுடல் இன்று வடமராட்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் விதை குழியில் விதைக்கப்படவுள்ளது.

கடந்த 18-ம் திகதி நுணாவில் பகுதியில் நடைபெற்ற விபத்தில் வீரச்சாவடைந்த இம் மாவீரனின் புகழுடல் அவரது இல்லத்தில் இருந்து இன்று காலை 8மணிக்கு பருத்தித்துறை வீதி வழியாக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கற்கோவளம் வழியாக காலை 9-15ற்கு முனை சென்தோமஸ் சனசமூக நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

அங்கிருந்து 4-ம் குறுக்குத் தெரு ஊடாக யாழ். வீதியை அடைந்து அங்கிருந்து காலை 11 மணிக்கு உடுப்பிட்டி சந்திப் பகுதியில் மக்கள்அஞ்சலிக்காக வைக்கப்படும்.

தொடர்ந்து அங்கிருந்து வதிரி ஊடாக வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12-30 மணிக்கு இவரது வித்துடல் விதைகுழியில் விதைக்கப்படவுள்ளது.

### உண்ணாவிரதத்தை

கட்சித் தலைவர் எஸ் ஆர் பாலசுப்பிரமணியமும் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாய் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக அனைத்துக் கட்சிக் கருத்து ஒன்றை உருவாக்குவதற்காக தமிழ் நாடு சட்டப் பேரவையின் அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவரான இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் முதலமைச்சர் ஜெயலலிதாவைக் கேட்டுள்ளார்.

சென்னையில் நேற்று அவர் செய்தியாளரிடம் பேசினார். செல்வி ஜெயலலிதா உண்ணாவிரதம் செய்வதென ஒரு தலைப்பட்சமான முடிவை மேற்கொண்டிருக்கக் கூடாது என்று பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். இந்தப் பிரச்சினை குறித்து மற்ற அரசியல் கட்சிகளோடும், கர்நாடக முதலமைச்சரோடும் செல்வி ஜெயலலிதா ஆலோசனை கலந்திருக்கவேண்டும் என்றும் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறினார்.

### ஆளுநர்

மேற்கொண்ட அனைத்து முயற்சிகள் பற்றியும் ஆளுநரிடம் தெளிவாக எடுத்து விளக்கிய முதல்வர் ஜெயலலிதா, மத்திய அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அரசு இதழில் வெளியிட்டிருப்பதையும் எடுத்துக் காட்டினார். மத்திய அரசு நடுவர் மன்றத்தின் இந்த இடைக்கால ஆணையை நிறைவேற்ற அனைத்து சட்ட நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்க வேண்டும் என்றும், அவ் அரசு அவ்வாறு செய்யத்தவறியதால்தான் உண்ணாவிரதம் இருக்க நேரிட்டதாகவும் குறிப்பிட்டார்.

### தமிழகத்தில்

டன.

அதேவேளை மதுரையில் ராஜாசெல்லப்பா என்ற ராஜ்ய சபா உறுப்பினரும் மற்றும் இரு எம்.எல்.ஏ களும் அரசுத் திணைக்களங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தமைக்காக கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை சமாதானத்தைப் பேணும்படி செல்வி ஜெயலலிதா தமிழ் நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

மறியல் போராட்டங்களையும், ஊர்வலங்களையும் உடன் நிறுத்தும் படியும் அவர் கோரியுள்ளார்.

நேற்று மாலை சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

### 800பேருக்கு

த்துவைக்கப்பட்டிருந்து பின் பலாலி முகாமிற்கு மாற்றப்பட்டு அங்கு 8 மாதங்களும் பின் களுத்துறை முகாமில் 7 மாதங்களும் தடுத்துவைக்கப்பட்டிருந்து புனர்வாழ்வு முகாமிற்கு மாற்றப்பட்டு அங்கு 4 மாதங்கள் இருந்ததாகவும் அதன் பின் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். இவருடன் கைது செய்யப்பட்ட செபஸ்தியான் எடின்பரோ என்பவரும் விடுதலை செய்யப்பட்டு தமது சொந்த வசிப்பிடமான குருநகர் வந்துள்ளனர். (சி)(நி)

### மாநகரசபை

### முன்னோடி

நடாத்தப்படும் மேற்படி பரீட்சைக்கு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சுமார் ஆயிரம் பேர் வரை தோற்றுகின்றனர்.

பெரு நிலப்பரப்புப்பகுதியில் மூன்று பரீட்சைநிலையங்களிலும்நடைபெறும் இப்பரீட்சை தொடர்ச்சியாக ஆறு நாட்கள் நடைபெறவுள்ளது.

### புத்தளம்

தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலின்போது 30 பேர் காவல் நிலையத்தில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### 2500 தமிழ்

இம் மாதம் 21 ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை அங்கு இடம்பெறவுள்ள ஜனாதிபதி இடம் பெயர் சேவையை அடுத்து அங்கு கெடுபிடி நடவடிக்கைகள் தொடர்வதாக தெரியவருகிறது.

மட்டக்களப்பிற்குச் செல்லும் வெளியூர் மக்கள் அங்குள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்

# முதல்வர் பதவியிலிருந்து நீக்க ஐ. தே. க. சதி

## சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

மேல் மாகாண சபையின் முதலமைச்சர் பதவியிலிருந்து என்னை அகற்றிவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சுசில் முனசிங்கவை அவ் இடத்திற்கு கொண்டுவரும் வகையில் சதித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் காலையில் ஒன்றும் மாலையில் மற்றொன்றுமாக முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும், ஜனநாயக தேசிய முன்னணி ஐ. தே. கவுடன் இணைந்தாலும் மேல் மாகாணத்தில் பொதுஜன ஐக்கிய கூட்டணியேஆட்சி நடத்தும் என்றும் கூறினார்.

மேல் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் தமக்கு ஆதரவளிக்க உறுதி கூறியிருப்பதாகவும் திருமதி சந்திரிகா எடுததுரைத்தார்.

# தொழிலொன்றைத் தேடி இலங்கை வரவில்லை

## – ரொனி டி மெல் தெரிவிப்பு

(கொழும்பு)

நான் தொழில் தேடித் திரியவும் இல்லை. தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக இங்கு வரவும்இல்லை இவ்வாறு அண்மையில் நாடு திரும்பியுள்ள முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல் கூறியுள்ளார்.

வெளிநாட்டுத் தூதுவராக அல்லது அமைச்சராக அல்லது வேறு ஏதாவது பதவியை பொறுப்பேற்க இருக்கிறீர்களா என்று நிருபர் ஒருவர் கேட்ட போது அதற்குப் பதிலளித்து ரொனி டிமெல் மேலும் கூறுகையில்;

எனது நாட்டுக்கு சேவை செய்ய விரும்புகின்றேன். நான் இறக்கும் வரையில் ...ச் சேவையை செய்வேன். இவ்வாறு செய்வதற்கு எனக்கு சுதந்திரமும் உண்டு என்றும் தெரிவித்தார்.

## 31-ம் நாள் நினைவுப் பூங்காவும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 16-04 1948



உதிர்வு: 20-06-1993

அமரர்

### திரு. பூதன் தம்பிஐயா

திதி: 20-07-1993 செவ்வாய்க்கிழமை

எங்களை எல்லாம் அன்பு கலந்த கண்டிப்புடன் அரவணைத்து ஒரு கூட்டுப் பறவையாக

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு ஆறுமுகம்

கரவெட்டி கவுந்திலலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், விசுவமடுவில் வசித்தவரும் விசுவமடு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவருமாகிய கார்த்திகேசு ஆறுமுகம் அவர்கள் 17-07-1993 சனிக்கிழமை பகல் 11 மணியளவில் காலமானார். இவர் வசந்திராதேவியின் அன்புக் கணவரும், ஆனந்தரூபன் (கூட்டுறவுத் திணைக்களம், புதுக்குடியிருப்பு), ஆனந்தவதனி (ஆசிரியை விசுவமடு மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-07-93 ஞாயிற்றுக்கிழமையன்று விசுவமடு மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆனந்தருபன்

(5425)

## சின்னப்பு ஆச்சிப்பிள்ளை

சங்கானை

சங்கானையைப் பிறப்பிடமாகக்கொண்ட சின்னப்பு ஆச்சிப்பிள்ளை நேற்று(19-07-93)திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர் T.சின்னப்பு அவர்களின் அன்புமனைவியும் சிவபாதசுந்தரம், தவலிங்கம், பசுபதி, காசிலிங்கம், சுந்தரலிங்கம், பரமேஸ்வரி, புனிதவதி (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பமலர், திலகவதி, ஜெகம், இராமநாதி, துரைராஜா [மலேசியா]. ஆகியோரின் மாமியாரும்ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரதுஇல்லத்தில் நடைபெற்று இன்று (20-07-93) பி.ப2.00மணிக்கு விளாவெளி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என அறியத்தருகிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை, (5426)

தகவல் :
T. S. பசுபதி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜுலை மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாநகரசபை படவில்லை.

புதிய சேவைகள் அல்லது முன்னேற்றங்கள் குறிப்பிட்ட பகுதியில் கொண்டுவருவது கருதி மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய சோலைவரிக்கு அமைச்சர் பணிக்கலாம்.

1983 முதல் வடபகுதி ஒரு யுத்த பூமியாக காணப்படுகிறது மக்களின் அன்றாட வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. வைத்திய சுகாதார வசதிகள் கிடையாது. நகர சுத்தி வேலையும் சிறிதளவே நடைபெறுகிறது. மின்சாரமும் கிடையாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ளில் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது

ஜெயலலிதாவின்

டுக் கொண்டுள்ளது.

இதேவேளை முதல்வரின் உண்ணாவிரதம் நிலைமையை மேலும் சிக்கலாக்கி இருப்பதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி முதல்வரின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

மற்ற கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதை தமிழக ஜனதாதள் கட்சி கண்டித்துள்ளது.

யில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

காவிரிநீர் விசாரணைச் சபையின் இடைக்கால உத்தரவை அமுல்படுத்தும் வரை உண்ணாவிரதத்தைத் தான் கைவிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஈ. பி. டி. பி

க்கு வெளியே இவர்கள் ஆயுதங்களுடன் திரிவதால் ஏற்பட்ட நிலையை ஜனாதிபதிக்கு காமினி எடுத்துரைத்ததாகவும் இதன் அடிப்படையில் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் உடன் ஆலோசனை நடத்தப்பட்டு முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறினார்.

# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை

# அறிவித்தல்

## சர்வதேச கூட்டுறவு தின விழா-
## மாவட்ட மட்ட போட்டிகள்

| திகதி | பங்குபற்றுவோர் | போட்டி | நேரமும் இடமும் |
|---|---|---|---|
| 24-07-93 | அங்கத்தவர், பணியாளர்கள் | பேச்சு, கட்டுரை, வினாடி வினா. | காலை 8.30; யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி. |
| 24-07-93 | அங்கத்தவர்கள் | கிராமிய நடனம், குழுப்பாடல் | பி. ப. 2 00; யாழ். மத்திய கல்லூரி மண்டபம் |
| 25-07-93 | மாணவர்கள் | பேச்சு, கட்டுரை. | காலை 8.30; யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி. |
| 25-07-93 | அங்கத்தவர்கள் | நாடகம் | காலை 8 30; யாழ். மத்திய கல்லூரி மண்டபம். |

★ குறிப்பு :- பாடசாலை மாணவர்களுக்கு 24-07-93 என முன்னர் அறிவிக்கப்பட்ட போட்டிகள் மேற்குறித்தவாறு 25-07-93 இல்நடைபெறும்

இல. 14, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம். (சி-7040)

– செயலாளர்

எங்களை எல்லாம் அன்பு கலந்த கண்டிப்புடன்
அரவணைத்து ஒரு கூட்டுப் பறவையாக
தலைமை தாங்கி நடத்திவந்த எங்கள் ஐயா!
எங்களை எல்லாம் சடுதியாக விட்டுப் பிரிந்த
தங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திப்போமாக.

தங்கள் நினைவில் வாழும்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

முன்னைய இடம்:
வரோதயநகர்
சாம்பல் தீவு.
திருக்கோணமலை.

வதிவிடம்:
வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி தெற்கு.

(5424)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்

ஆகாய கடல் வெளி வெஞ்சமரில்
வீரச்சாவு

பிறப்பு: 28 – 08 – 1972



வீரச்சாவு: 20 – 07 – 1991

## வீரவேங்கை தர்சினி
(அருளம்பலம் றஞ்சினி)

தரணியிலே வந்துதித்தாள் றஞ்சினி - அவள்
தானும் ஒரு தமிழ் நங்கை என்றெண்ணி
தாய் நாட்டின் நிலை கண்டு கொதித்தெழுந்து
தலைவனது வழியினிலே தயங்காமல்
தாயகத்தைக் காத்திடவே களமாடி
தன்மானத் தங்கை தர்சினியானாள்.

என்றும் உன் நினைவில்
அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

இல. 52,
10-ம் வாய்க்கால்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி. (5423)